இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 05.06.2026

# பதற வைக்கும் பாலியல் வன்கொடுமைகள்!

முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்றது முதல் கிரிமினல்களின் ஆட்டம் அதிகம் ஆகிவிட்டது. கேட்பார் இல்லை என்ற நிலைமை உருவாகிவிட்டது. கொலை, கொள்ளைக்கு இணையாகப் பாலியல் வன்கொடுமைகள் நடந்து பதற வைக்கின்றன. மே 11 அன்று முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்றுக் கொண்டார். மே 30 ஆம் தேதிக்குள் நடந்த பாலியல் வன்முறைகள் இவை...

- **சூலூரில் நடந்த கொடுமை யாராலும் மறக்க முடியாதது. 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். சிறுமி உயிரோடு இருப்பதாக முதலில் சொல்லிவிட்டு, பிணமாகக் கொடுத்துள்ளது போலீஸ். அம்மாவுக்குத் தெரியாமல் சிறுமியின் உடலை எடுத்துச் சென்றுள்ளார்கள். அவசர அவசரமாக எரித்துள்ளார்கள்.**
- சென்னையில் 16 வயது சிறுவனுக்கு மது கொடுத்து பாலியல் கொடுமை செய்த தலைமைக் காவலர் கைது செய்யப்பட்டுள்ளார்.
- கடலூரில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் புதைக்கப் பட்டார்.
- சென்னையில் 61 வயதான மூதாட்டியை 5 பேர் சேர்ந்து கூட்டுப் பாலியல் கொடுமை செய்துள்ளார்கள்.
- திருவண்ணாமலையில் சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த விஜய் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.
- மதுரையில் அழுகிய நிலையில் காருக்குள் இருந்து ஒரு பெண்ணின் உடல் மீட்கப்பட்டுள்ளது.
- **தூத்துக்குடி ஸ்ரீவைகுண்டம் அருகே இளம்பெண் ஒருவருக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்துக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் த.வெ.க. தூத்துக்குடி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் ராமநாதபுரம் மாவட்ட த.வெ.க. நிர்வாகி ஜெயபால் ஆகியோர் கைதானார்கள்.**
- சென்னை காசிமேட்டில் 11 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை அளித்த ஆர்.கே.நகர் 43-ஆவது வார்டு த.வெ.க. பகுதி பொறுப்பாளர் ‘பாம்பு’ தினேஷ் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.
- தாம்பரம் அடுத்த மணிமங்கலத்தில் கல்லூரி மாணவி குளிப்பதை ஜன்னல் வழியே எட்டிப்பார்த்த த.வெ.க. நிர்வாகி தியாகு (32) கைதானார்.
- மதுரை கீழமாத்தூர் பகுதியில் பெயிண்டர் வேலை பார்த்து வரும் த.வெ.க. நிர்வாகி கண்ணன் 10-ஆம் வகுப்பு மாணவியின் வீட்டுக்கு நள்ளிரவில் சென்று பாலியல் தொல்லை அளித்தபோது கையும் களவுமாக சிக்கினார். போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார்.
- விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அடுத்த வண்டிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் கன்னியப்பன். 62 வயதான இவர், அதே பகுதியைச் சார்ந்த 11 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.
- திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற பெண்ணுக்குப் பாலியல் தொல்லை கொடுத்து நகையை ஒரு கும்பல் பறித்துள்ளது. பாலியல் தொல்லை தந்த 8 பேர் கொண்ட கும்பலில் வாசுதேவன் என்பவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட வாசு தேவனின் செல்போனிலிருந்து 20-க்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்கள் இருப்பதை போலீஸார் கண்டு பிடித்தனர்.
- செங்குன்றம் அருகே 8 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த லாரி ஓட்டுநர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், செந்தில்குமார் என்பவரை செங்குன்றம் மகளிர் போலீஸார் கைது செய்தனர். பக்கத்து வீட்டில் வசிக்கும் நபர் இவர்.
- **கோவை மாவட்டம் கோவில்பாளையத்தைச் சேர்ந்த திருமணம் நிச்சயிக்கப்பட்ட காதலர்கள் அன்னூர் நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். அப்போது மதுபோதையில் இருந்த த.வெ.க. இளைஞர், இருசக்கர வாகனத்தைப் பின் தொடர்ந்து வந்து அச்சுறுத்தி உள்ளார். இதனால் அச்சமடைந்த காதலர்கள், அங்குள்ள தேநீர் கடையில் தஞ்சம் புகுந்தனர். அங்கிருந்த பொதுமக்கள், இளைஞரிடம், ‘ஏன் இவர்களை பின் தொடர்கிறாய்’ என்று கேட்டதற்கு, “நான் த.வெ.க.வைச் சேர்ந்தவன், பெண்களின் பாதுகாப்பிற்காகத் தான் இப்படிப் பின்தொடர்ந்து வந்தேன், என்னை விஜய் தான் பார்க்கச் சொன்னார்!” என்று உளறினார். இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. இதுதொடர்பாக, காதலர்கள் அன்னூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.**
- நாமக்கல்லில் இரண்டு சிறுமிகள் பாலியல் தொல்லைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். குற்றவாளி யார் என்று சொல்லி அந்த சிறுமிகளின் பெற்றோர் புகார் தருகிறார்கள். ஆனாலும் போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் நிலையம் பொதுமக்களால் முற்றுகை இடப்பட்டது. அதன்பிறகு தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- மதுரை திருமங்கலத்தில் கோவில் திருவிழாவுக்கு வந்த 13 வயது சிறுமிக்குப் பாலியல் வன்கொடுமை நடந்துள்ளது. பெற்றோர் புகார் கொடுத்த பிறகு தான் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.
- சென்னை மெரினா கடற்கரையில் 6 வயது சிறுமி பாலியல் தொல்லைக்கு உள்ளானார். பொதுமக்கள் அவரை பிடித்து அடித்த பிறகு அவர் கைது செய்யப்பட்டார்.
- கோயம்பேடு மதுபான பாரில் ஏற்பட்ட தகராறில் பெண்கள் இருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

- இவை அனைத்தும் இருபது நாட்களுக்குள் நடந்த பாலியல் வன்கொடுமைகள். புகார் ஆனவை மட்டும். புகார் ஆகாமல் பல வன்கொடுமைகள் நடந்திருக்கலாம்.

**பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ உருவாக்கப்படும் என விஜய் முதல்வராகப் பதவியேற்ற போது கையெழுத்து போட்டார். 20 நாளாகியும் அந்தத் திட்டத்தை தொடங்கவில்லை. மே 29-ஆம் தேதி நடப்பதாக இருந்த சிங்கப்பெண் அதிரடிப்படை திட்டத் துவக்க விழாவை ரத்து செய்துவிட்டு தனது மேனேஜர் வீட்டுக்குப் போய்விட்டார் முதலமைச்சர் விஜய். அவருக்கு எது முக்கியம் என்பதை இதன் மூலம் உணரலாம்.**

தி.மு.க. ஆட்சியில் செயல்பட்ட பிங்க் பேட்ரோல் (Pink Patrol) திட்டத்தை ஸ்டிக்கர் ஒட்டி சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை என மாற்றினார்கள். சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த பெண் போலீஸுக்கே பாலியல் தொல்லை கொடுத்த புகாரில் தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரி போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் திலீபன் இடைநீக்கம் செய்யப்பட்டார். சிங்கப் பெண் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவருக்கு பாதுகாப்பு கேட்கும் நிலையில்தான் சட்டம் ஒழுங்கு இருக்கிறது.

விஜய் முன்பு கேட்ட கேள்வி தான் இப்போதும் நினைவுக்கு வருகிறது...

**“நீங்க எதுக்குங்க சார்?**

**உங்க ஆட்சி எதுக்குங்க சார்?**

**உங்களுக்கு சி.எம்.பதவி எதுக்குங்க சார்?”**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கோடம்பாக்கம் முரசொலி அலுவலகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவியும் வணங்கினார்.

### தி.மு.க. மாநில தொழிலாளர் அணிச் செயலாளர்

# பிடிசி ஜி.செல்வராஜ் இல்ல திருமண வரவேற்பு விழா!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூன் 5-

தி.மு.க. மாநில தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அவர்களின் பேரனும் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளருமான எஸ்.ஆர்.ரவி - திருமதி ஆர்.கீதா ஆகியோரின் மகனுமான ஆர்.ஜி.அபிஷேக்கிற்கும் - சென்னை சூளை, டிஆர்எஸ். சசிகுமார் - திருமதி எஸ்.புஷ்பராணி தம்பதியரின் அன்புமகளுமான எஸ்.கீர்த்தனாவிற்கும் திருமணம் 7.6.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் சென்னை 115, ஈசிஆர், நீலாங்கரை, மகாத்மா காந்தி நகர், எண்.4/11ல் உள்ள ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

முன்னதாக திருமணத்தின் வரவேற்பு விழா நாளை (6.6.2026 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் மற்றும் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., இளைஞர் அணிச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., ஆகியோர் தலைமையில் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் வரவேற்புரையில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ., திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிர மணியன், அரியலூர் மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், ஆதிதிராவிடர் நலக்குழு மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத்திருமண வரவேற்பில் தலைமைக் கழக நிர்வாகிகள் - முன்னாள் அமைச்சர் பெருமக்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்கள் - இந்நாள், முன்னாள் பாராளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் - கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் - மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள் - அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் - கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் உள்ள நிர்வாகிகள், தொழிற்சங்க நிர்வாகிகள் - பிரதிநிதிகள் மற்றும் தி.மு.க. தொழிலாளர் அணியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் - கழக முன்னணியினர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா

# திருவாரூர் மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு நடைபெற்றது!

## கலைஞர் கோட்டம் - கீழவீதி இல்லம் - காட்டூர் பகுதிகளில் மரியாதை!

*திருவாரூர், ஜூன் 5-*

*மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா திருவாரூர் மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு கொண்டாடப்பட்டது. ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு கிளைக் கழகங்களில் கழக கொடி ஏற்றப்பட்டது, பொதுமக்களுக்கு இனிப்புகள், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன .*

*மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களின் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாக்களில் திருவாரூர் கீழவீதியில் உள்ள கலைஞர் இல்லம், காட்டூர் கலைஞர் கோட்டம், அன்னை அஞ்சுகத்தம்மையார் நினைவிடம் உள்ளிட்ட பகுதிகளில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டு, கழக கொடி ஏற்றப்பட்டும், ஏழை ஏழைய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.*

*கோட்டூர் தெற்கு ஒன்றிய பிறந்த நாள் நிகழ்வுகளில் மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் பங்கேற்று கழக கொடி ஏற்றி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*திருவாரூர் பகுதிகளில் ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகர செயலாளர் வாரை, எஸ்.பிரகாஷ் ஆகியோர் தலைமையிலும், கொரடாச்சேரி பகுதிகளில் ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் ஆகியோர் தலைமையிலும், மன்னார்குடி பகுதிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தலையாமங்கலாம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முதுவேல், சித்தேறி சிவா, ஐ.வி.குமரேசன் ,தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வம், நகர செயலாளர் வீரா. கணேசன் ஆகியோர் தலைமையிலும்.*

*நீடாமங்கலம் பகுதிகளில் கழக சட்டத்திருத்தக் குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சோம. செந்தமிழ்ச்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், பேரூர் செயலாளர் ஆர்.ராமராஜ் ஆகியோர் தலைமையிலும், வலங்கைமான் பகுதிகளில் ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, பேரூர் செயலாளர் ப.சிவநேசன் ஆகியோர் தலைமையிலும்.*

*குடவாசல் பகுதியில் ஒன்றிய செயலாளர்கள் எஸ்.ஜோதிரமன், ப.பிரபாகரன், நகர செயலாளர் ஏ.கே.டி.சேரன் ஆகியோர் தலைமையிலும், நன்னிலம் பகுதிகளில் ஒன்றிய செயலாளர்கள் கேப்டன் எம்.செல்வராஜ், வே. மனோகரன், நகர செயலாளர் வ.பாக்கிரிசாமி, பேரூர் செயலாளர் சிவ. தியாகு ஆகியோர் தலைமையிலும்,*

*திருத்துறைப்பூண்டி பகுதிகளில் ஒன்றிய செயலாளர்கள் ப.பிரகாஷ், நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன், வழக்கறிஞர் எம்.ராம கிருஷ்ணன், முத்துப்பேட்டை பகுதியில் ஒன்றிய செயலாளர் இரா. மனோகரன், நகரசெயலாளர் எம்.எஸ்.கார்த்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன், கோட்டூர் பகுதிகளில் ஒன்றிய செயலாளர்கள் வி. எஸ்.ஆர்.தேவதாஸ், பல. ஞானவேல் ஆகியோர் தலைமையிலும், கூத்தாநல்லூர் நகர பகுதியில் நகர செயலாளர் எஸ்.வி. பாக்கிரிசாமி தலைமையிலும் கழக கொடி ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.*



சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் அவரது பிறந்தநாளையொட்டி நேற்று முன்தினம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கோபாலபுரம் கலைஞர் இல்ல உதவியாளர் எஸ்.மோகன் உள்ளார்.